அடையாறு ஆற்றுக்கு கீழ் மெட்ரோ ரெயில் பணிகள்: ஸ்டாலின் நேரில் ஆய்வு

சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெளிவருவதை பார்த்தார்

சென்னை, பிப்.13– சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் சார்பில் அடையாறு ஆற்றிற்கு கீழ் செல்லும் சவாலான வழித்தடப் பகுதி உட்பட மொத்தம் 1.218 கி.மீ தூரத்தை கடந்து அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையப் பகுதியில் சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெளிவரும் பணியினை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் இரண்டாம் கட்டப் பணியின் கீழ், கெல்லீஸ் முதல் தரமணி வரையிலான சுரங்க வழித்தடப் பகுதியில் கிரீன்வேஸ் மெட்ரோ நிலையம் முதல் அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் வரையிலான பணியில், 300 மீட்டர் அடையாறு ஆற்றிற்கு கீழ் செல்லும் சவாலான வழித்தடப் பகுதி உட்பட மொத்தம் 1.218 கி.மீ தூரத்தை கடந்து அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் அருகில் சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெளிவரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கருணாநிதி தலைமையிலான அரசால் 2007ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அப்போதைய துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் 2009–ம் ஆண்டு ஜூன் மாதம் பணிகள் தொடங்கப்பட்ட 54.1 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் கட்டம்–I இன் இரண்டு வழித்தடங்களில் முழுமையாக பயணிகள் சேவை இயக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் நாளொன்றிற்கு சராசரியாக 3.1 லட்சத்திற்கும் மேல் பயணம் செய்து வருகின்றார்கள்.

43 கி.மீ. சுரங்கப்பாதை

அதன் தொடர்ச்சியாக, சென்னை மெட்ரோ இரயில் கட்டம்–II–ன் கட்டுமானப் பணிகள், 3 வழித்தடங்களில், 118.9 கி.மீ நீளத்தில் 128 ரெயில் நிலையங்களுடன் 63,246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இப்பணிக்காக 23 சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு, கட்டம் II–ல் மொத்தம் 42.6 கி.மீ நீளத்திலான சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வழித்தடம் 3–ல் மட்டும் 26.7 கி.மீ நீளத்தில் மாதவரம் – கெல்லீஸ் மற்றும் கெல்லீஸ் – தரமணி ஆகிய இரண்டு பகுதிகளாக சுரங்கம் தோண்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் இரண்டாவது பகுதியான கெல்லீஸ் முதல் தரமணி வரையிலான சுரங்க வழித்தடப்பகுதியில் கிரீன்வேஸ் மெட்ரோ நிலையம் முதல் அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் வரை வருகிறது.

சவால்கள்

பல்வேறு விதமான மண் தன்மைகள், கடினமான பாறைகள், அதிநீரோட்ட பகுதிகள் மற்றும் நகர்புறத்திற்கென இடர்பாடுகள் ஆகிய சிக்கலான சவால்களை வெற்றிகரமாக சந்தித்து, அடையாறு என்று பெயரிடப்பட்ட சுரங்கம் தோண்டும் இயந்திரம் ஜூன் 2023–ல் சுரங்கம் தோண்டும் பணிகளை கிரீன்வேஸ் சாலை மெட்ரோ நிலையத்திலிருந்து தொடங்கி, அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையத்திற்கு அருகில், அடையாறு ஆற்றின் கீழ் சுமார் 40 முதல் 50 அடி ஆழத்தில் 300 மீட்டர் நீளத்திற்கு அடையாறு ஆற்றிற்கு கீழ் செல்லும் வழித்தடப் பகுதி உட்பட மொத்தம் 1.218 கி.மீ தூரத்தை கடந்து அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் அருகில் வெளி வந்தது. செப்டம்பர் 2024இல் காவேரி என்று பெயரிடப்பட்ட சுரங்கம் தோண்டும் இயந்திரம், டவுன்லைன் சுரங்கம் தோண்டும் பணியினை முடித்துள்ளது.

சுரங்கம் தோண்டும் இயந்திரம் அடையாறு சந்திப்பு மெட்ரோ நிலையம் அருகில் வெளிவந்தது. இந்த முக்கியமான பணியினை முதலமைச்சர் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, இப்பணிகள் அனைத்தையும் உரிய காலத்தில் முடித்திட வேண்டும் என்று அலுவலர்களுக்கு முதலமைச்சர் உத்தரவிட்டார்.

இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வனத்துறை அமைச்சர் க. பொன்முடி, சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. கோபால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவள்ளூர் அகரமேல் துணை சுகாதார நிலையத்தில் புதிய மருத்துவ கட்டிடங்கள்

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், நாசர் திறந்து வைத்தனர்

திருவள்ளூர், பிப். 13– திருவள்ளூர் மாவட்டம் அகரமேல் துணை சுகாதார நிலையத்தில் ரூ.1.95 கோடி செலவில் கட்டப்பட்ட 6 புதிய மருத்துவ கட்டிடங்களை மருத்துவ மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் திறந்து வைத்து எடை குறைவான குழந்தைகளுக்கு தினந்தோறும் பால் மற்றும் முட்டை வழங்கும் திட்டத்தை மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் தலைமையில், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி முன்னிலையில் துவக்கி வைத்தனர்.

அப்போது அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:

திருவள்ளூர் மாவட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் வளமிகு வட்டார வளர்ச்சி திட்டத்தின் சார்பாக பூண்டி வட்டாரத்தில் உள்ள கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்து குறைபாடுள்ள (எடை குறைவு மற்றும் மெலிவு தன்மை) குழந்தைகளுக்கு தினந்தோறும் 200 மில்லி பால் மற்றும் முட்டை 150 நாட்களுக்கு தொடர்ச்சியாக வழங்கும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. அதாவது பூண்டி வட்டாரத்தில் உள்ள 797 ஊட்டச்சத்து குறைபாடுள்ள (181 கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் 486 மிதமான ஊச்சத்து குறைபாடுள்ள) குழந்தைகளின் ஊட்டச்சத்தினை மேம்படுத்தும் விதமாக இத்திட்டம் துவக்கி வைக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் வாரத்தில் மூன்று நாட்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் மூலம் முட்டையும் மீதமுள்ள நான்கு நாட்களுக்கு வளமிகு வட்டார சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் மூலமாக ஊட்டச்சத்து குறைபாடுள்ளதாக கண்டறியப்பட்ட 797 குழந்தைகளுக்கு வழங்கப்படும் 200 மில்லி பால் ஆவின் நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு தினந்தோறும் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதே அரசின் நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் சீறும் சிறப்புமாக செயல்படுத்தப்பட உள்ளது. ஆரோக்கியமான குழந்தைகளால் ஆனதே வலிமையான தேசம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் (பொ) கந்தன், போஜன் அபியான் திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜீவ், மற்றும் மருத்துவ அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மருத்துவ வசதிகளை மேம்படுத்தக் கோரி விவாதம்: பாராளுமன்றத்தில் விஜய் வசந்த் எம்.பி கோரிக்கை

புதுடெல்லி, பிப்.13– இந்தியாவில் குறிப்பாக ஊரகங்களில் மக்கள் மருத்துவ வசதிகளை பெறுவதில் உள்ள குறைபாடுகள் குறித்து பாராளுமன்றத்தில் விவாதித்து நோயற்ற சமூகத்தை உருவாக்க அரசு முன் வரவேண்டும். அதற்காக பாராளுமன்றத்தில் விவாதம் தேவை என கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய்வசந்த் ஒத்திவைப்பு தீர்மானம் ஒன்றினை கொண்டு வந்துள்ளார்.

இந்த பட்ஜெட்டில் சுகாதாரத்தை மேம்படுத்த நிதி ஒதுக்கிய போதிலும் அது நமது தேசத்தின் சுகாதார மேம்பாட்டிற்கு போதுமானதாக இல்லை. நமது நாட்டின் வளர்ச்சி விகிதத்தின் 10 சதவிகிதம் சுகாதார மேம்பாட்டிற்கு ஒதுக்க வேண்டிய நிலையில் இன்று அரசு வெறும் 2 சதவிகிதம் மட்டுமே ஒதுக்கியுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் போதிய நிதியினை அரசு ஒதுக்கவில்லை.

இந்தியாவில் மருத்துவர்களின் எண்ணிக்கை மிக குறைவாக உள்ளது. 1000 நபர்களுக்கு ஒரு மருத்துவர் தேவை என்ற வழிகாட்டுதலை விட குறைவாக 1500 இந்தியர்களுக்கு ஒரு மருத்துவர் என்ற நிலை உள்ளது. குறிப்பாக கிராமங்களில் இந்த குறைபாடு மிக அதிக அளவில் காணப்படுகிறது. கிராமப்புறங்களில் உள்ள மருத்துவமனைகளில் கால் பங்கு காலி பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது.

இந்தியாவின் 50 சதவிகிதம் மருத்துவமனைகளில் குடிநீர், மின்சாரம், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் உள்ளது. கோவிட் காலக்கட்டத்தில் நமது மருத்துவமனைகளில் உள்ள குறைபாடுகள் குறித்து நாம் கண்டறிந்தோம். அதுபோன்ற ஒரு இடரை எதிர்கொள்ள நமது நாட்டில் மருத்துவ வசதிகளை மேம்படுத்தி நாம் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

இந்தியர்களின் மருத்துவ செலவில் 62 சதவிகிதம் தங்கள் சொந்த காசில் செய்ய வேண்டிய கட்டாயத்தில் நமது மக்கள் உள்ளனர். ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டியது அரசின் கடமை. இவற்றை குறித்து மக்களவையில் விவாதிக்க வேண்டும் என கோரி ஒத்திவைப்பு தீர்மானம் ஒன்றினை முன்மொழிந்துள்ளதாக விஜய் வசந்த் தெரிவித்துள்ளார்.

தமிழகம் முழுவதும் 'இலைகளின் குரலாய் இணையத்தில்' திறமை தேடல் போட்டி

ஜெயலலிதா பிறந்த நாள்: 77 நாள் கொண்டாட திட்டம்

அ.தி.மு.க. தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆலோசனை கூட்டத்தில் முடிவு

சென்னை, பிப்.13– ஜெயலலிதாவின் 77–வது பிறந்த நாளை தமிழகம் முழுவதும் 77 நாட்கள் கொண்டாட அண்ணா தி.மு.க. தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் வி.வி.ஆர்.ராஜ்சத்யன் தலைமையில் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாநில தலைவர் கோவை சத்யன் மற்றும் நிர்வாகிகள் டி.கவுரிசங்கர், என்.ராஜ ராஜசோழன், டி.பிரசாத், இந்திராணி சுடலைமுத்து, சி.கிருபாகரன், எஸ்.டி.தர்மேத்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

புரட்சித்தலைவி அம்மாவின் 77வது பிறந்தநாள் விழாவினை, எடப்பாடியாரின் மேலான ஆணைக்கிணங்க, கழக தகவல் தொழில்நுட்பப் பிரிவு சார்பில் 77 நாட்கள் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்படுவது என தீர்மானிக்கப்படுகிறது. அதன் முக்கிய அங்கமாக, மாற்றங்களுக்கு தன்னை எப்போதும் தகவமைத்துக் கொள்ளும் எடப்பாடியாரின் மேலான ஆணைக்கிணங்க, இன்றைய இளம் தலைமுறையின் மேடையும் களமுமாக இருக்கும் சமூக ஊடகங்களின் முக்கியத்துவம் உணர்ந்து, வழக்கமான போட்டிகளைப் போல அல்லாமல், புத்தாக்கத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கும் வகையில், இணைய வழியில் வெகுஜன மக்களை சென்றடையும் கருத்தாழமிக்க இளைஞர்களைக் கண்டறியும் நோக்கத்துடன், கழக தகவல் தொழில்நுட்பப் பிரிவு சார்பில் 'இலைகளின்குரலாய்_ இணையத்தில்' என்ற மாநிலம் தழுவிய திறமை தேடல் போட்டிகளை நடத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

தொகுதிக்கு ஒருவர் தேர்வு

இந்த போட்டிகள் வாயிலாக, சட்டமன்றத் தொகுதிக்கு ஒருவர் என 234 பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களில் சிறந்தவர்களை ஐடி விங் கான்க்ளேவ்–ல் எடப்பாடியார் முன்னிலையில் தங்கள் திறமைகளை அரங்கேற்றுவதற்கான வாய்ப்பும் அளித்து, தொடர்ந்து கழக தகவல் தொழில்நுட்பப் பிரிவு சார்பில் நமது மேடைகளிலும், பிற இணைய மேடைகளிலும் தங்கள் திறனை கழக தகவல் தொழில்நுட்பப் பிரிவு சார்பில் வெளிக்கொணர வாய்ப்பு அளிக்கப்படும்.

இந்த போட்டிக்கான நடுவர் மன்றத்தினை கழக இலக்கிய அணி, கழக புரட்சித் தலைவி பேரவை, கழக இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் பாசறை, கழக வழக்கறிஞர் அணி, மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகளை உள்ளடக்கி அமைத்திடவும் தீர்மானிக்கப்படுகிறது.

இளைஞர்கள் மற்றும் மாணவர்களை சீரழிக்கும் போதைப்பொருள் புழக்கத்தை தடுக்கத் தவறியும், தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கை அடியோடு சீர்குலைத்தும் வரும் ஸ்டாலின் மாடல் திமுக அரசைக் கண்டித்து, எடப்பாடியார் தலைமையிலான நம் கழகத்தின் வலுவான குரல் இந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும் வரை தொடரும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த பாலியல் வன்கொடுமை நாட்டையே உலுக்கியுள்ளது என்றால் மிகையாகாது. இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியான திமுக அனுதாபியான ஞானசேகரன், ஒரு சாருடன் போனில் பேசியதாக வந்த செய்தியையொட்டி, எடப்பாடியார் கேட்ட "யார் அந்த SIR" என்ற ஒற்றைக் கேள்வி தேசிய அளவில் எதிரொலித்து, பொதுமக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கிடைக்கும் வரை, யார் அந்த SIR என்ற கேள்வியை விடாமல் கேட்போம் எனவும், விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடர்ச்சியாக மேற்கொள்வோம் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

விழிப்புணர்வு பிரச்சாரம்

இன்றைக்கு நடக்கும் ஸ்டாலின் மாடல் திமுக ஆட்சி என்பது பெண்களுக்கு துளியும் பாதுகாப்பு இல்லாத ஆட்சியாகவே இருக்கிறது.

தமிழ்நாட்டு பெண்களின் பாதுகாப்பிற்காக என்றைக்கும் எடப்பாடியார் தலைமையிலான அண்ணா தி.மு.க. துணைநிற்கும் என்பதை வெளிப்படுத்தும் விதமாக, வரும் மார்ச் 8 அன்று, நம் தலைமைக் கழகம் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் மாளிகை பிங்க் நிற விளக்குகளால் ஒளிரூட்டப்படும்,

தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் மாணவ மானவிகளுக்கான "GOOD TOUCH BAD TOUCH" விழிப்புணர்வு ஏற்படுத்தி, இதுபோன்ற கொடிய சம்பவம் நடைபெறும் போது தற்காத்துக் கொள்ளும் முறைகள் மற்றும் உதவி நாட வேண்டிய வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்வது என தீர்மானிக்கப்படுகிறது.

சட்டம் ஒழுங்கு சீர்கேடு, போதைப்பொருள் புழக்கம், பெண்கள் பாதுகாப்பு கேள்விக்குறி, அனைத்து வரி மற்றும் கட்டண உயர்வு, மாநில உரிமைகள் தாரைவார்ப்பு என தமிழ்நாட்டை பின்நோக்கி இழுத்துக் கொண்டிருக்கிறது திமுக ஸ்டாலின் மாடல் அரசு.

இந்த அரசின் அவலங்களை இளைய தலைமுறையினரிடம் தொடர்ந்து கொண்டு சேர்க்கும் வகையில், சமூக ஊடகங்களை தீவிரமாகவும், இளைஞர்களை ஈர்க்கும் வகையிலும் பயன்படுத்தி, இன்றைய Gen Z Voters வாக்குகளை 5% வரை நம் கழகத்திற்கு சேர்க்கும் வகையில் கழக தகவல் தொழில்நுட்பப் பிரிவு புத்தெழுச்சியுடன் செயல்பட்டு, இந்த ஆட்சியின் அவல நிலை மாறி, "அமைதி வளம் வளர்ச்சி" என்ற அம்மாவின் தாரக மந்திரத்தோடு வெற்றிநடைபோடும் தமிழகம் என்ற நிலைக்கு தமிழ்நாடு மீண்டும் வர, 2026ல் எடப்பாடியார் தலைமையிலான அண்ணா தி.மு.க.வின் ஆட்சி அமைத்திட அயராது உழைப்போம் என கழக தகவல் தொழில்நுட்பப் பிரிவு சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தரணி சுகாஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட்

PGP GROUP

பதிவு அலுவலகம்: 'பிஜிபி ஹவுஸ்', புதிய எண்.59 (பழைய எண்.57) ஸ்டெர்லிங் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034
தொலைபேசி எண்.91-44-28311313 தொலைநகல் எண்.091-44-28232074
CIN-L15421TN1987PLC014454
மின்னஞ்சல்: secretarial@dharanisugars-pgp.com இணையதளம்: www.dharanisugars.in

டிசம்பர் 31, 2024 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான முழுமையான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் அறிக்கை SEPI (LODR) ஒழுங்குமுறை 47 (1) (b) ஒழுங்குமுறை 2015

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	விவரங்கள்	காலாண்டு முடிந்தது			9 மாதங்கள் முடிந்தது		ஆண்டு முடிந்தது
		டிசம்பர் 31, 2024 தணிக்கை செய்யப்படாத	செப்டம்பர் 30, 2024 தணிக்கை செய்யப்படாத	டிசம்பர் 31, 2023 தணிக்கை செய்யப்படாத	டிசம்பர் 31, 2024 தணிக்கை செய்யப்படாத	டிசம்பர் 31, 2023 தணிக்கை செய்யப்படாத	மார்ச் 31, 2024 தணிக்கை செய்யப்பட்டது
1.	செயல்பாடுகளின் மொத்த வருமானம் (பிற வருமானம் உட்பட)	22.47	27.69	0.08	54.25	14.33	18.11
2.	காலத்திற்கான லாபம் (இழப்பு) (வரிக்கு முன், விதிவிலக்கான பொருட்கள்)	(1863.54)	(1817.70)	(680.33)	(5154.91)	(2105.19)	(3457.66)
3.	வரிக்கு முந்தைய காலத்திற்கான லாபம் (இழப்பு) (விதிவிலக்கான பொருட்களுக்குப் பிறகு)	(1883.54)	(2595.25)	11,276.87	(5821.38)	9852.01	12,132.39
4.	வரிக்குப் பிந்தைய காலத்திற்கான லாபம் (இழப்பு) (விதிவிலக்கான பொருட்களுக்குப் பிறகு)	(1883.54)	(2595.25)	11,276.87	(5821.38)	9852.01	12,132.39
5.	மற்ற விரிவான வருமானம் (வரி நிகர)	–	–	–	–	–	–
6.	அந்தக் காலத்திற்கான மொத்த விரிவான லாபம் (இழப்பு) [அந்தக் காலத்திற்கான லாபம் (இழப்பு) (வரிக்குப் பிறகு) மற்றும் பிற விரிவான வருமானம் (வரிக்குப் பிறகு)]	(1883.54)	(2595.25)	11,276.87	(5821.38)	9852.01	12,132.39
7.	ஈக்விட்டி பங்கு முலதனம்	3,320.00	3,320.00	3,320.00	3,320.00	3,320.00	3,320.00
8.	இல் காட்டப்பட்டுள்ளபடி இருப்புக்கள் (மறுமதிப்பீட்டு கையிருப்பு தவிர) முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலை	NA	NA	NA	NA	NA	(10,897.55)
9.	ஒரு பங்கின் வருவாய் (ஒவ்வொன்றும் ரூ.10/-) (தொடர்ந்து மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கு)						
	(அ) அடிப்படை	(5.67)	(7.82)	33.97	(17.53)	29.67	36.54
	(ஆ) நீர்த்த	(5.67)	(7.82)	33.97	(17.53)	29.67	36.54

குறிப்புகள் : மேலே உள்ளவை டிசம்பர் 31, 2024 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாகும். 2015 ஆம் ஆண்டின் (SEBI பட்டியல் மற்றும் கடமைகள் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள், 33 இன் கீழ் பங்குச் சந்தை மற்றும் கிடைக்கும் நிறுவனத்தின் பங்குகள் www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகிய பங்குச் சந்தை இணையதளங்களில் பட்டியலிடப்பட்டுள்ளது மற்றும் நிறுவனத்தின் இணையதளம் www.dharanisugars.in இல் கிடைக்கும்.

தரணி சுகரிஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட்
டாக்டர் பழனி G பெரியசாமி
செயல் தலைவர்
DIN: 00081002

இடம் : சென்னை
தேதி : பிப்ரவரி 12, 2025

INDOWIND ENERGY LIMITED

INDOWIND Green Power For You. Forever

CIN: L40108TN1995PLC032311
REGD Office: "Kothari Buildings" 4th Floor, 114, M.G.Road, Nungambakkam, Chennai- 600 034. Tel: 044-28331310 Email: contact@indowind.com

EXTRACT OF STATEMENT OF FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 31-12-2024 (Rs. In Lakhs)

Particulars	Consolidated			
	Quarter ended			Year ended
	31-12-2024 (Un-Audited)	30-09-2024 (Un-Audited)	31-12-2023 (Un-Audited)	31-03-2024 (Audited)
Total income from operations (Gross)	828.26	1345.02	1003.64	4184.18
Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and Extraordinary Items)	-6.48	403.72	7.09	661.02
Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and Extraordinary Items)	-6.48	403.72	7.09	556.02
Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and Extraordinary Items)	-6.44	441.70	-6.98	726.89
Total Comprehensive Income for the period (Comprising Profit/Loss for the period (after tax) and other comprehensive Income (after tax))	2.70	441.10	8.14	711.67
Paid up Equity Share Capital of Rs.10/- each	12880.17	12880.17	10733.48	10733.48
Reserves (excluding Revaluation Reserve)	-	-	-	12982.95
Earnings Per Share (of `Rs.10/- each) (for continuing and discontinued operations)				
Basic (in Rs.):	0.00	0.34	0.01	0.68
Diluted (in Rs.):	0.00	0.34	0.01	0.68

Note: 1. Additional information on Standalone Financial Results pursuant to Reg. 47 (Rs. In Lakhs)

Particulars	Standalone			
	Quarter ended			Year ended
	31-12-2024 (Un-Audited)	30-09-2024 (Un-Audited)	31-12-2023 (Un-Audited)	31-03-2024 (Audited)
Total income from Operations	572.62	1019.01	714.93	3017.12
Profit / (Loss) Before Tax	13.00	350.11	-104.12	367.47
Profit / (Loss) After Tax	13.04	388.12	-118.19	538.35
Total Comprehensive Income	21.86	396.76	-110.08	554.05

2. The above is an extract of the detailed format of quarterly results for the quarter ended on 31st December 2024 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full formats of the Standalone and Consolidated Financial Results were reviewed by the Audit Committee and approved at the Meeting of the Board of directors of the Company at the Meeting held on 12th Feburary, 2025 and the same are available on the Stock Exchange websites. (www.bseindia.com / www.nseindia.com) and Company's Website www.indowind.com

For INDOWIND ENERGY LIMITED
Sd./-
N K Haribabu
Whole-Time Director & CFO

Place : Chennai
Date : 12th February, 2025

பங்குச் சான்றிதழ்கள் காணவில்லை

சென்னை, தி.நகர், டாக்டர்.நாயர் சாலை, எண்.8 (போன்: 9841045284) இல் வசிக்கும் எல்.அனந்தகிருஷ்ணனின் மகன் டாக்டர். ஏ.விக்ரம் என்ற நான், 04/01/2025 அன்று பிற்பகல் சுமார் 3.00 மணியளவில் தி.நகர், தண்டபாணி தெருவில் ஜெராக்ஸ் எடுக்கச் சென்றபோது, பின்வரும் அசல் பங்குச் சான்றிதழ்களைத் தொலைத்து விட்டேன். பங்குச் சான்றிதழ்களின் விவரங்கள் பின்வருமாறு:

I. 500 மதிப்புள்ள பங்குகள்ரூ. 10/ வீதம், 5 பங்குச்சான்றிதழ்களில் 100 பங்குகள் வீதம், ஒவ்வொரு பங்குக்கும் எண். 46660 எண். 2203347–2203446) 58555 (எண் 2839848–2839947) 148226 (எண். 8488582–8488681) 148227 (எண். 8488682–8488781) 9989082 (எண். 8488782–8488881) LINDE INDIA LIMITED இல் ஃபோலியோ எண். 2224947 முதல் வைத்திருப்பவர் மாலதி அனந்தகிருஷ்ணன் இரண்டாவது வைத்திருப்பவர் ஏ. விக்ரம்.

II. ரூ. 10/ முக மதிப்புள்ள 545 பங்குகள், 100 பங்குகள் கொண்ட 5 பங்குச் சான்றிதழ்களில் உள்ளன. 9989830 (எண். 11243855–11243954) 9989831 (எண். 11243955–11244054) 9989832 (எண். 11244055–11244154) 9989833 (எண். 11244155–11244254) 9989834 (எண். 11244255–11244354) மற்றும் சான்றிதழ் எண். 9985411 (எண் 4783086–4783105) மற்றும் சான்றிதழ் எண். 9959743 (எண் 482328–482352), LINDE INDIA LIMITED இல் ஃபோலியோ எண். 2224946 முதல் வைத்திருப்பவர் மாலதி அனந்தகிருஷ்ணன் இரண்டாவது வைத்திருப்பவர் ஏ. பிரிதம்.

III. ரூ. 1/ முக மதிப்பு கொண்ட 500 பங்குகள், சான்றிதழ் எண். 20857 தனித்துவ எண் 10719613–10720112. ஃபோலியோ எண்ஃ CFL107877 இன் கீழ் COROMANDEL INTERNATIONAL LIMITED இல் முதல் ஹோல்டர் ஏ. பிரிதம் மற்றும் இரண்டாவது ஹோல்டர் எல், அனந்தகிருஷ்ணன்

இந்த பகிர்வு சான்றிதழ்களை யாராவது கண்டால், தயவுசெய்து மேற்கூறிய குடியிருப்பு முகவரியில் என்னை தொடர்பு கொள்ளவும்.

டாக்டர். ஏ. விக்ரம்